வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 19.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- உலகின் இயற்கை வேளாண்மைக் கேந்திரமாக, இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கோவையில், தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டை தொடக்கி வைத்து, விவசாயிகளுக்கான பிஎம்-கிசான் திட்ட நிதி உதவிகளை விடுவித்தார்.

- 56-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவா மாநிலம் பனாஜியில் நாளை தொடங்க உள்ளது.

- புதுச்சேரி மற்றும் காரைக்காலில், தமிழ் வழிக் கல்விக்கான தனிப் பள்ளிகளைத் தொடக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

மோடி-கோயமுத்தூர்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கோவையில், தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டை தொடக்கி வைத்தார். நாடு முழுவதிலும் 9 கோடி விவசாயிகளுக்கு உதவும் வகையில், பிஎம்-கிசான் திட்டத்தின் கீழ், 21-ஆவது தவணையாக, மொத்தம் 18 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவிகளை, பிரதமர் விடுவித்தார். 10 சிறந்த இயற்கை விவசாயிகளுக்கு விருதுகளையும் அவர் வழங்கினார்.

நாட்டின் வேளாண் துறை கடந்த 11 ஆண்டுகளில், புரட்சிகரமான மாற்றங்களை சந்தித்து இருப்பதாக, விழாவில் பேசுகையில் பிரதமர் கூறினார். இந்தியாவின் பல்லுயிர்ச் சூழல் புதிய வடிங்களுக்கு மாறி வருவதாகவும், தற்போது உலகின் இயற்கை வேளாண்மை கேந்திரமாக இந்தியா மேம்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார். இந்தியாவின் வேளாண் ஏற்றுமதி 2 மடங்காக அதிகரித்து இருப்பதாகவும், வேளாண் சாகுபடி முறைகளை நவீனப்படுத்த, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். கிசான் கடன் அட்டை மூலமாக விவசாயிகள் இதுவரை, 10 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் பலன் பெற்றுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மத்திய தகவல்- ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், உழவர்சங்க ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு பி ஆர் பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக கோவை விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் திரு நரேந்திர மோடியை, மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், தமிழ்நாடு பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன், அஇஅதிமுக பொதுச் செயலர் திரு எடப்பாடி பழனிசாமி, மாநில பிஜேபி முன்னாள் தலைவர் திரு அண்ணாமலை உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தொடர்ந்து, கோவை விமான நிலையத்தில் இருந்து, விழா நடைபெற்ற கொடிசியா மைதானம் வரை, சாலை பவனியாக வந்த பிரதமர் திரு நரேந்திர மோடியை, ஏராளமான பொது மக்கள், சாலையின் இருபுறமும் கூடி நின்று, உற்சாகமாக வரவேற்றனர்.

மாநாட்டு மைதானத்தில், மாநாட்டின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ள இயற்கை வேளாண் பொருட்களின் கண்காட்சியை பிரதமர் திறந்து வைத்து, இயற்கை விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

மோடி-ஆந்திரா

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில், பகவான் சத்யசாய் பாபாவின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, நினைவு தபால் தலை மற்றும் 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்டார். இந்திய கலாச்சாரத்தில், மக்கள் சேவைக்கே மகத்துவம் அதிகம் என்றும், அனைவருக்கும் அன்பு- அனைவருக்கும் சேவை என்பதே, பகவான் சத்திய சாய் பாபாவின் போதனை என்றும், அவர் தமது உரையில் கூறினார்.

முன்னேறிய நாடு என்னும் இலக்கை நோக்கிய இந்தியாவின் பயணத்தில் ஒரு பகுதியாக, நாட்டில், சமூக நலத் திட்டங்களால் பயன் பெறுவோர் எண்ணிக்கை, தற்போது 100 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளதாக, பிரதமர் தெரிவித்தார். பொது மக்கள் உள்ளூர் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தி, உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். முன்னதாக பிரசாந்தி நிலையத்தில் உள்ள சாய்பாபா சமாதியில், பிரதமர் திரு நரேந்திர மோடி சிறப்பு பிராத்தனை செய்தார்.

ஜிஎஸ்டி-கேரளா

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், கேரளத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து, ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், கேரளத்தில், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், மற்றும், கடலோர சமூகத்தினர் முக்கிய பலன் பெற்றுள்ளனர். மாநிலத்தில் 3 லட்சம் தொழிலாளர்களுக்கு

வாழ்வாதாரமாக திகழும் முந்திரி பதனீட்டுத் துறைக்கான ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், இத்துறையில் உற்பத்திச் செலவும், ஏற்றுமதி செலவுகளும் குறைந்துள்ளன. காபி தயாரிப்புகள் மீதான வரியும், 18 சதவிகித அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதால், வயநாடு பகுதியில் அதிகம் உள்ள காபி தோட்டங்களும், காபி சார்ந்த உற்பத்தியாளர்களும் ஊக்கம் பெற்றுள்ளனர். மலபார் மிளகு மீதான வரியும், கடல் உணவுப் பதனீட்டு துறையினருக்கான வரியும், 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால் மலைப் பகுதி விவசாயிகளும், கடலோர சமூகத்தினரும் உற்சாகம் அடைந்துள்ளனர். கேரளத்தின் புகழ் பெற்ற ஆயுர்வேத மருந்துகள் மற்றும் உடல் நல சேவைகள் மீதான வரி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், இத்துறையில், மருந்து விலை மற்றும் சேவைக் கட்டணங்கள், 6 முதல் 11 சதவிகிதம் வரை குறைந்துள்ளன. இவ்வாறாக கேரளத்தில் பல்வேறு துறையினருக்கும் வரிச் சுமை குறைந்து வருமான வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதை, கண்கூடாகவே காண முடிகிறது.

*திரைப்பட விழா*

56-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவா மாநிலம் பனாஜியில் நாளை தொடங்க உள்ளது. தொடக்க விழாவில், பிரபல திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள், கலைக் குழுக்கள் மற்றும் மாநில அரசுகளின் பங்கேற்புடன், வண்ணமிகு அணிவகுப்பும் இடம் பெற உள்ளது. திரைப்பட விழா நாளை முதல் வரும் 28-ஆம் தேதி வரை நடைபெறும். 81 நாடுகளில் இருந்து, 240-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், இவ்விழாவில் திரையிடப்பட உள்ளன. இவ்வாண்டு இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், ஜப்பானிய திரைப்படங்களுக்கு, சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

*இந்திரா* (13)

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பிறந்த நாளான இன்று புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி

ஆகியோர் அரசு சார்பில், அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கேஎஸ்பி ரமேஷ், திரு சாய் சரவணன் குமார், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான் ஆகியோரும், இந்திராகாந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் போது முதலமைச்சர் திரு ரங்கசாமி, தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழியை வாசிக்க, அனைவரும் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். புதுச்சேரி ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநர் தலைமையிலும், தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலர் தலைமையிலும், தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி ஏற்கப்பட்டது.

*நமச்சிவாயம்*

மத்திய அரசு அறிவுறுத்தலின் படி, 1 முதல் 6-ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி கற்பிக்கும் வகையில், புதுச்சேரி மற்றும் காரைக்காலில், தனிப் பள்ளிகளைத் தொடக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார். இன்று புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் புதிய வகுப்பறைகள் மற்றும் இதர வசதிகளை திறந்து வைத்தும், புதிய கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் உரையாற்றினார். புதுச்சேரியில் 190 ஆரம்ப பள்ளி ஆசிரியர் பணியிடங்களை நிரப்பவும், ஒப்பந்த அடிப்படையிலான 292 ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் கூறினார். சிபிஎஸ்இ மாணவர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ……

(வாய்ஸ்- நமச்சிவாயம்)

*கடல் பாசி*

கடலோர சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலான, மத்திய அரசின் கடல் பாசி வளர்ப்பு திட்டம், புதுச்சேரி

பனித்திட்டு கிராமத்தில் அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமி காந்தன் ஆகியோர் முன்னிலையில், கடல் பாசி அறுவடைப் பணிகள் இன்று நடைபெற்றன. மீன்வளத் துறை இயக்குநர் திரு முகமது இஸ்மாயில் மற்றும் அதிகாரிகளும் பஞ்சாயத்து பிரமுகர்களும், மீனவ சுய உதவிப் பெண்களும் இதில் கலந்து கொண்டனர்

*வானிலை*

இன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நெல்லை, குமரி, தென்காசி, நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 22-ஆம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்க கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகலாம் என்றும், இது, வரும் 24-ஆம் தேதி வாக்கில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கு அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுவடையக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 25-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் புதுச்சேரியில் 3 சென்டிமீட்டர், மற்றும், காரைக்காலில் 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*புதுச்சேரி-கலா உத்சவ்*

தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டிகளின் ஒரு பகுதியாக புதுச்சேரியில் காமராஜர் மணி மண்டபத்தில் இன்று நடைபெற்ற மாநில அளவிலான கலா உத்சவ் போட்டிகளில், புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம் ஆகிய 4 பிராந்தியங்களைச் சேர்ந்த 83 மாணவ-மாணவிகள்

கலந்து கொண்டு, கலைத் துறையில் தங்களின் தனித் திறன்களை வெளிப்படுத்தினர். இதில் வெற்றி பெறும் மாணவ-மாணவிகள், புனேயில் நடைபெற உள்ள தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெறுவார்கள்.

வேட்டி,சேலை

புதுச்சேரியில், ஆதிதிராவிடர்களுக்கு, பொங்கல் பண்டிகைக்கான, இலவச வேட்டி-சேலைக்கு பதிலாக பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை பயன் பெறாத, 18 வயது பூர்த்தி அடைந்த புதிய ஆதிதிராவிட பயனாளிகள், வரும் டிசம்பர் 10 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அறிவித்துள்ளது. துறை அலுவலகத்தை அணுகி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

உலகின் இயற்கை வேளாண்மைக் கேந்திரமாக, இந்தியா மேம்பட்டு வருவதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கோவையில், தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டை தொடக்கி வைத்து, விவசாயிகளுக்கான பிஎம்-கிசான் திட்ட நிதி உதவிகளை விடுவித்தார்.

56-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவா மாநிலம் பனாஜியில் நாளை தொடங்க உள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலில், தமிழ் வழிக் கல்விக்கான தனிப் பள்ளிகளைத் தொடக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.